# 03-04-2024 செய்தி

## தணிக்கை தலைமை இயக்குநராக ஜி.கே.அருண் சுந்தர் தயாளன் நியமனம்

- நிதித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ்வரும், கூட்டுறவு, பால் கூட்டுறவு தணிக்கை, உள்ளாட்சி நிதி தணிக்கை, இந்து சமய அறநிலைய மற்றும் தமிழ்நாடு அரசு நிறுவனங்களின் தணிக்கைத் துறைகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிட மாநில அரசின் சார்பில் தணிக்கை தலைமை இயக்குநர் பதவியிடம் கடந்த 2022 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- தணிக்கை இயக்குநரகங்களின் செயல்பாடுகள், அவை செயல்படுத்தும் திட்டங்கள் தொடர்பான ஆய்வுகள் மற்றும் அறிக்கைகளை நிதித் துறைக்கு தணிக்கை தலைமை இயக்குநர் அனுப்பி வைப்பார்.

## நீதித் துறையின் திசைவழி

**முக்கியத் தீர்ப்புகள்**

- கடந்த பத்து ஆண்டுகளில் தாம், பண மதிப்பிழப்பு அறிவிப்பு, அயோத்தி ராமஜென்ம பூமி, சபரிமலையில் பெண்கள் வழிபாடு, காஷ்மீரில் 370 ஆவது பிரிவு ரத்து, தன்பாலினத் திருமணத்துக்குச் சட்ட அங்கீரம் மறுப்பு எனப் பல தீர்ப்புகள் வெளிவந்தன.

**சட்டம் மற்றும் நீதித் துறையின் செயல்பாடுகளில் மூன்று அம்சங்கள் உள்ளன.**

- **1.** சட்ட வரம்புக்கு அப்பாற்பட்ட வழக்குகளும் நீதிமன்றத்துக்கு வருகின்றன. அதைப் பற்றி முன்னாள் தமைமை நீதிபதி என்.வி.ரமணா இப்படிக் கூறினார். "கொள்கை வகுப்பதில் நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்றாலும், ஒரு குடிமகன் புகாருடன் எங்களிடம் வந்தால் நீதிமன்றம், அதை மறுக்க முடியாது. எனவே, ஆழமாக விவாதம் - விவாதத்தின் பின் சம்பந்தப்பட்ட மக்களின் தேவைகள் அபிலாஷைகள் உள்ளடங்கிய சட்டங்களை நிறைவேற்ற வேண்டும்" என்றார்.

  நீதிபதி வி.ஆர்.கிருஷ்ணய்யரும் இதையே கூறியிருக்கிறார். "ஒரு நாட்டில் நீதித் துறையானது மேலோட்டமாக ஒரு பார்வையாளராக இருக்கக் கூடாது, அவ்வாறு இருக்கிறதா? - மாறாக, மக்கள் மீதான அநீதியை எங்கு கண்டாலும் உடனே தீயணைப்புத் துறை போன்ற விரைவு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். குத்துச்சண்டைப் போட்டியில் நிற்கும் நடுவர் போல் இருக்க முடியாது".

- **2. நீதி பரிபாலனத்துக்கு எது தேவை?** அகில இந்திய நீதிபதிகள் சங்கம் தொடர்ந்த வழக்கில் (All India Judges Association Vs Union of India 2002 (4) SCC 247) இது குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.
- போதுமான நீதிமன்றங்கள், அவற்றில் போதிய அறைகள், இருக்கைகள், குடிநீர், கழிப்பறை வசதிகள் ஆகியவை அத்தியாவசியமானவை. அவற்றிலும் முக்கியத்துவம் வாய்ந்தது நீதிபதிகளின் எண்ணிக்கை ஆகும். 16,000 நீதிபதிகள், 3 கோடி வழக்குகள் என்பதே இப்போதைய நிலை, நீதிபதிகளின் விகிதாச்சாரம் உயர்த்தப்பட வேண்டும். 10 லட்சம் பேருக்கு 10.5 அல்லது 13 என்பது 50 என உயர்த்தப்பட வேண்டும். உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகளின் பணியிடங்களில் 59% இன்னும் பூர்த்திசெய்யப்படவில்லை, இத்தகைய தேவைகளைப் பூர்த்திசெய்யாமல், புதிய சட்டங்களை இயற்றுவது நீதிமன்றத்தின் தோள்களில் பாரத்தை ஏற்றுவதற்குச் சமம்.

  **3. நீதிமன்றங்கள் எதிர்நோக்குபவை:** குடியுரிமைச் சட்டத்தில் 2019 ஆம் ஆண்டு செய்யப்பட்டுள்ள திருத்தத்தை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

- அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையான மதச்சார்பின்மை சவாலுக்கு உள்ளாகிறது. அரசமைப்புச் சட்டக் கூறுகள் 15,21,21A ஆட்டம் கண்டுள்ளன.
- கொல்கத்தா உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த அபிஜித் கங்கோபாத்யாய் 05.03.2024 இல் பதவி விலகினார்.
- 2018 முதல் கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்த காலத்தில், அவர் வழங்கிய தீர்ப்புகள் (14 வழக்குகளில் அவர் சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தார்) நம்பகத்தன்மைக்கு உரியவையா எனக் கேள்விகள் எழுந்திருக்கின்றன.
- மாநிலங்களிடம் மத்திய அரசு வரி வசூலிப்பதோடு சரி, அவர்கள் தேவைக்கு நிதி தருவதில்லை என்கிற குற்றச்சாட்டு வலுத்திருக்கிறது. இதற்காகக் கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் உச்ச நீதிமன்றம் சென்றுள்ளன. கூட்டாட்சியை நெறிப்படுத்துவதும் நீதிமன்றப் பணியாகிறது.
- இந்தியத் தேர்தல் ஆணையர் நியமனத்தில் பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் அடங்கிய குழுவில் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியும் முக்கிய அங்கமாக இருந்தார். மத்திய அரசு அவரைப் புறக்கணித்தது. அவருக்குப் பதிலாக மத்திய அமைச்சரை இணைத்தது.
- இதைப்போன்று நீதிமன்றங்கள் பல வழக்குகளையும், சவால்களையும் எதிர்நோக்கியுள்ளன.